

தலைமைச் செயலகத்தில், நேற்று (26.09.2023) வனத்துறை அமைச்சர் மரு. மா.மதிவேந்தன் தலைமையில் மாநில வன உயிரின வாரியத்தின் எட்டாவது ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹு, சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் உதயசூரியன், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறை தலைவர்) சுப்ரத் முஹபத்ர முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வன உயிரின காப்பாளர் ஸ்ரீனிவாஸ் ஆர் ரெட்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் மா.மதிவேந்தன் தலைமையில்

# வன உயிரின வாரிய ஆலோசனைக் கூட்டம்!

சென்னை, செப்.27

வனத்துறை அமைச்சர் மரு. மா.மதிவேந்தன் தலைமையில் நேற்று (26.09.2023) மாநில வன உயிரின வாரியத்தின் எட்டாவது ஆலோசனை கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வன உயிரினம் சார்ந்த பல்வேறு திட்ட முன் மொழிவுக்கு வன உயிரின வாரியம் பரிந்துரை செய்தது. மேலும் தமிழ்நாட்டில் உள்ள வன உயிர்கள் மற்றும் பல்லுயிர் பெருக்கத்திற்கான பல்வேறு புதிய திட்டங்கள் குறித்து விவாதம் நடைபெற்றது. மேலும் வன உயிரினங்களை பாதுகாப்பதற்கான முன் முயற்சிகளான வன உயிரின தடுப்பு பிரிவு, வன உயிர்களின் முதலுதவி சிகிச்சை மையம் மற்றும் காடுகளை காப்பதற்கான பல்வேறு முயற்சிகளை தமிழக அரசு சிரத்தையுடன் எடுத்து வருகிறது என்று வனத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். தமிழக அரசு இந்து சமய அறநிலையத்துறையுடன் சேர்ந்து கோயில் காடுகளை பாதுகாக்க தேவையான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகிறது. மேலும் கடல் ஆமைகளை பாதுகாக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை துரிதப்படுத்த விவாதிக்கப்பட்டது.

தமிழக வனப்பரப்பில் உள்ள அந்நிய களைச் செடிகளை அகற்ற அரசு போர்க்கால நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் அவர்கள் கூறினார். வன உயிரினங்களால் ஏற்படும் சேதங்களுக்கு நிவாரணம் வழங்கும் பணி சிறப்பாக நடைபெற்று வருவது குறித்து அமைச்சர் அவர்கள் பாராட்டுகளை தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹு சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் உதயசூரியன், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறை தலைவர்) சுப்ரத் முஹபத்ர, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வன உயிரின காப்பாளர் ஸ்ரீனிவாஸ் ஆர்.ரெட்டி, மற்றும் வன உயிரின வாரியத்தின் இதர உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நேற்று (26.9.2023) சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அலுவலகக் கூட்டரங்கில் சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்தில் நடைபெற்று வரும் பணிகளின் தற்போதைய நிலை குறித்தும் மற்றும் அப்பணிகளுடன் சேர்ந்து நடைபெற்று வரும் இதரப் பணிகள் குறித்தும் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் எஸ்.ருத்ரமூர்த்தி, எ. பாலசுப்ரமணியன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### டெங்கு-மழைக்கால நோய்கள் தடுப்பு நடவடிக்கை:

# அக்டோபர் 1 அன்று 1,000 சிறப்பு மருத்துவ முகாம்கள்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

*தேனி, செப்.27-*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு முழுவதும் டெங்கு மற்றும் மழைக் கால நோய்கள் தடுப்பு நடவடிக்கைகளுக்கான 1,000 சிறப்பு மருத்துவ முகாம்கள் வருகிற அக்டோபர் மாதம் 1-ஆம் தேதி நடைபெறும் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.*

*தேனி மாவட்டத்தை சேர்ந்த வடிவேல் (வயது 43) அவர்கள் விபத்தில் மூளைசாவு அடைந்து அவர் உடல் உறுப்புகள் தானமாக வழங்கப்படுகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, அவருக்கு அரசு மரியாதை செலுத்துவதற்காக தேனி மாவட்டம் செல்லும் வழியில் மதுரை விமான நிலையத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-*

*தமிழ்நாட்டில் தற்போது அதிக மழைப்பொழிவு காரணத்தினால் பருவமழை கால நோய்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக டெங்கு மற்றும் காய்ச்சல் அனைத்து மாவட்டங்களிலும் பரவலாக சற்று அதிகரித்து காணப்படுகிறது. மதுரை, திருநெல்வேலி, தென்காசி, தூத்துகுடி, காஞ்சிபுரம், திருவாரூர், கோவில்பட்டி, செய்யார், கடலூர், செங்கல்பட்டு, விழுப்புரம் போன்ற மாவட்டங்களில் அதிகரித்துள்ளது.*

*காய்ச்சல் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் அந்தந்த பகுதிகளிலேயே பொது மக்களுக்கு சிகிச்சை அளிக்கும் பொருட்டு தமிழகம் முழுவதும் அனைத்து இடங்களிலும் குறைந்தது 1000 காய்ச்சல் தடுப்பு மருத்துவ முகாம்கள் நடைபெற அறிவுறுத்தப்பட்டுள்ளது. மருத்துவ குழுவினர் தினந்தோறும் காய்ச்சல் பாதித்த இடங்களுக்குச் சென்று ஆங்காங்கே மருத்துவ சிகிச்சை முகாம்கள் நடத்த உள்ளனர். மேலும் இந்த முகாம்களில் பொது மக்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் பொருட்டு நிலவேம்பு குடிநீர் கஷாயம் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் பொதுமக்களுக்கு காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் இந்த காய்ச்சல் முகாம்களுக்காக தமிழகத்தில் 476 நடமாடும் மருத்துவக் குழுக்கள் ஈடுபடுவார்கள்.*

*மேலும் 805 RBSK நடமாடும் பள்ளி மருத்துவ குழுக்கள் பள்ளிகளில் காய்ச்சல் கண்டறியும் முகாம் ஏற்படுத்தப்பட்டு அனைத்து பள்ளி மாணவ மாணவியர்களுக்கும் பரிசோதிக்கப்பட்டு காய்ச்சல் கண்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. தேவைப்படும் மாணவர்களுக்கு மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*மேலும் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு காய்ச்சல் கண்ட மாணவர்களின் விவரத்தை உடனடியாக அருகில் உள்ள மருத்துவ அலுவலர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்களுக்கு தெரிவிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது தவிர பள்ளி வளாகங்களில் ஏடீஸ் கொசுக்கள் வளராமல் தடுக்க கொசுப்புழு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் புகை மருந்து அடிக்கவும் அறிவுறுத்தப்பட்டு உள்ளது.*

*அனைத்து சத்துணவு மையங்களிலும் உள்ள குழந்தைகளுக்கு மருத்துவ பரிசோதனை செய்யவும் சத்துணவு மையங்களிலும் கொசு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*எனவே பொதுமக்கள் அச்சமின்றி காய்ச்சல் ஏற்பட்டவுடன் உடனடியாக அருகில் உள்ள காய்ச்சல் தடுப்பு முகாம்களுக்கு சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.*

*காய்ச்சல் உள்ளவர்கள் அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கு சென்று சிகிச்சை மேற்கொள்ளவும், சுய சிகிச்சை மேற்கொள்ள வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.*

*இதற்கு முன்னரே தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் டெங்கு மற்றும் மழைக்கால நோய்கள் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த கூட்டம் நடத்தப்பட்டது, அதன் பிறகு, 16.09.2023 அன்று எனது தலைமையில் டெங்கு மற்றும் மழைக்கால நோய்கள் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது.*

*இதன் தொடர் நடவடிக்கையாக வருகிற அக்டோபர் மாதம் 1-ஆம் தேதி, தமிழ்நாடு முழுவதும் டெங்கு மற்றும் மழைக் கால நோய்கள் தடுப்பு நடவடிக்கைகளுக்கான 1,000 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படவுள்ளது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.*

### திருவொற்றியூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

# டி.கே. பழனிச்சாமி 23 ஆம் ஆண்டு நினைவு நாள்!

### கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. மலரஞ்சலி!

*திருவொற்றியூர், செப். 27 -*

*திருவொற்றியூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நகரமன்ற தலைவர் முன்னாள் நகர செயலாளர் மறைந்த மக்கள் தொண்டன் டி.கே.பழனிச்சாமி அவர்களின் 23வது ஆண்டு நினைவஞ்சலி முன்னிட்டு திருவொற்றியூர் சட்ட மன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் அய்யா டி.கே.பி.அவர்களின் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்தார்.*

*நிகழ்ச்சி ஏற்பாடு கிழக்குப் பகுதி அவைத் தலைவர் ஆர்.சி.ஆசைத் தம்பி,*

*இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் வி.இராம நாதன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன், 5வது வட்டக் கழக செயலாளர் கே.பி.சொக்கலிங்கம் எம்.சி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார், வட்டக் கழக செயலாளரும் சுற்றுச்சூழல் அணி மாவட்ட துணை அமைப்பாளருமான ஏகா. கார்த்திகேயன், சென்னை வடகிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் பா.பால உமாபதி, தலைமை கழக சொற்பொழிவாளர் வாசு. கருணாநிதி, மாவட்ட பிரதிநிதிகள் பி.எஸ்.சைலஸ், எம்.அப்துல்சலீம், கலைஞர்நகர் பாபு,*

*நெசவாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் எஸ்.ஏ.மணி, ரவிக்குமார்,*

*13 வது வட்டக் கழக நிர்வாகிகள் கே.எஸ்.ஆனந்தன், ஜே.கருணாநிதி, ராம்ராஜ், ஜே.சுந்தரம், டி.இ. பரணிகுமார், ந.அனில் குமார், சிவசக்தி நகர் பத்மநாபன், பகுதி மீனவர் அணி அமைப்பா ளர் எஸ். செல்வம்,*

*துணை அமைப்பாளர் எம்.எல்.வேலன், முன்னாள் மாவட்ட துணை அமைப்பாளர் ராதா தங்கவேல், போட்டோ செந்தில், சிவக்குமார், எம். கார்த்திக், எஸ்.கலைச்செல்வன், டி.ராஜி, சி.தினேஷ், உள் ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகளும் மகளிர் அணி என பலர் கலந்து கொண்டு புகழ் அஞ்சலி செலுத்தினர்.*

### தி.மு.க. விவசாய அணி

# திருநெல்வேலி மண்டலத்திற்குட்பட்ட மாவட்ட மற்றும் மாநகர தலைவர், துணைத் தலைவர்கள் - அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

### தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க மாவட்டந்தோறும் "தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா" வினை தி.மு.க. விவசாய அணி கொண்டாடவிருப்பதையொட்டி, அது குறித்து கலந்தாலோசிக்க,

திருநெல்வேலி மண்டலத்திற்குட்பட்ட தி.மு.க. விவசாய அணி மாவட்ட மற்றும் மாநகர தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம்" என்.கே.கே.பெரியசாமி, தி.மு.க. விவசாய அணி இணைச் செயலாளர்கள் எஸ்.அப்துல்காதர் - ம.முத்துராமலிங்கம், தி.மு.க. விவசாய அணி துணைச் செயலாளர் கே.வி.செல்லப்பா மற்றும் மாநில விவசாய அணி நிர்வாகிகள் ஆகியோர் தலைமையில், திருநெல்வேலி கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், திருநெல்வேலி மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் மேயர். ரெ.மகேஷ், ஆகியோர் முன்னிலையில், விருதுநகர் தெற்கு மாவட்டச் செயலாளர் **கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன்,** விருதுநகர் வடக்கு மாவட்டச் செயலாளர் **தங்கம் தென்னரசு,** தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் **திருமதி.கீதாஜீவன்,** தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் **அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்,** கன்னியாகுமரி மேற்கு மாவட்டச் செயலாளர் **மனோதங்கராஜ்** ஆகியோர் சிறப்புரையாற்றிட, வருகிற 29.09.2023 (வெள்ளிக் கிழமை) காலை 11.30 மணியளவில், குற்றாலம், ஐந்தருவி சாலை, சேனைத் தலைவர் மாளிகை திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தி.மு.க. விவசாய அணியின் மாவட்ட மற்றும் மாநகர தலைவர், துணைத் தலைவர்கள் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 26.9.2023

**ஏ.கே.எஸ்.விஜயன்**
செயலாளர்
தி.மு.க. விவசாய அணி

### போக்குவரத்துக்கு இடையூறாக கைவிடப்பட்ட வாகனங்களை அகற்றுவது மற்றும்

# வாகன நிறுத்த மேலாண்மை ஆலோசனைக் கூட்டம்!

### மேயர் ஆர்.பிரியா தலைமையில் நடைபெற்றது!

*சென்னை,செப்.27-*

*பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள் மற்றும் தெருக்களில் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக நீண்ட நாட்களாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கைவிடப்பட்ட வாகனங்களை அகற்றுவது மற்றும் வாகன நிறுத்த மேலாண்மை தொடர்பான ஆலோசனைக்கூட்டம் மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில் நடைபெற்றது.*

*மேயர் நிதிநிலை அறிக்கையின் அறிவிப்பின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நீண்ட காலமாக கேட்பாரற்று பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கைவிடப்பட்ட வாகனங்களை அகற்றுவது மற்றும் வாகன நிறுத்த மேலாண்மை தொடர்பான ஆலோசனைக்கூட்டம் மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில் நேற்று (26.09.2023) ரிப்பன் கட்டடக் கூட்டரங்கில் நடைபெற்றது.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின் படியும், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படியும், பெருநகர சென்னை மாநகராட்சியின் 202223ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நீண்ட காலமாக கேட்பாரற்று பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கைவிடப்பட்ட வாகனங்கள் அகற்றப்பட்டு வருகிறது. மேலும், செப்டம்பர் 1ஆம் தேதி முதல் காவல்துறையின் உதவியுடன் இந்தப் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*அதனடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நீண்ட காலமாக கேட்பாரற்று பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கைவிடப்பட்ட வாகனங்களாக வடக்கு வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் 271 வாகனங்கள், மத்திய வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் 644 வாகனங்கள் மற்றும் தெற்கு வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் 393 வாகனங்கள் என மொத்தம் 1,308 வாகனங்கள் கண்டறியப்பட்டுள்ளது. இவற்றில் வடக்கு வட்டாரப் பகுதிகளில் 43 வாகனங்கள், மத்திய வட்டாரப் பகுதிகளில் 137 வாகனங்கள் மற்றும் தெற்கு வட்டாரப் பகுதிகளில் 25 வாகனங்கள் என மொத்தம் 205 வாகனங்கள் அகற்றப்பட்டு மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் வைக்கப்பட்டுள்ளது. இந்த வாகனங்களில் உரிமையாளர்களால் உரிமை கோரப்பட்ட 51 வாகனங்கள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 154 உரிமை கோரப்படாத வாகனங்களும், 30.09.2023 வரை அகற்றப்படும் வாகனங்களும் சேர்த்து மின்னணு ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*மேலும், ஏலம் விடப்பட உள்ள வாகனங்களின் விவரங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் தெரியப்படுத்தப்பட்டு, வாகன உரிமையாளர்களால் வாகனங்களை திரும்பப் பெறுவதற்கு 15 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படும். அதன் பின்னரும் யாரும் உரிமைக் கோராத வாகனங்கள் மின்னணு ஏலம் விடப்படும் எனக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.*

*மேலும், இக்கூட்டத்தில் வாகனங்களை மக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறின்றி மாநகராட்சியால் அடையாளம் காணப்பட்ட இடங்களில் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஆலோசிக்கப்பட்டது.*

*இக்கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, வட்டார துணை ஆணையாளர்கள் எம்.சிவகுரு பிரபாகரன், (வடக்கு), எஸ்.ஷேக் அப்துல் ரஹ்மான், (மத்தியம்), எம். பி.அமித், (தெற்கு) , தலைமைப் பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) என். மகேசன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*



சென்னை தென்மேற்கு மாவட்ட மருத்துவ அணி சார்பில் மாவட்டத் தலைவர் டாக்டர் எம்.எஸ். சரவணகுமார் ஏற்பாட்டில் மாபெரும் இலவச மருத்துவ முகாம் தியாகராயர் நகர் காமராஜர் காலனி குடியிருப்பு பகுதியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் – மயிலை த.வேலு எம்.எல்.ஏ தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, தியாகராயர் நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., மருத்துவ அணி மாநில துணை செயலாளர்கள் டாக்டர். ஜே.அருண், டாக்டர்.கலைகதிரவன், மாவட்ட அமைப்பாளர் டாக்டர்.கோ.சக்தி விக்னேஷ், தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, ராஜா அன்பழகன் எம்.சி., வட்ட கழக செயலாளர்கள்: லலிதாபுரம் என்.துரை, எஸ்.லட்சுமிகாந்தன், பி.மாரி, ஜி.பி.செந்தில்குமரன், முன்னாள் வட்ட செயலாளர் கோ.உதயசூரியன் மற்றும் நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### தி.மு.க. தொழிலாளர் அணி

# கோவை மண்டல நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க 'தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா"வினை மாவட்டந்தோறும் சிறப்பாக கொண்டாடுவது' என தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கிணங்க, கோவை மண்டலத்திற்குட்பட்ட கோவை, நீலகிரி, திருப்பூர், ஈரோடு ஆகிய மாவட்டங்களில் நிகழ்ச்சிகள் கீழே குறிப்பிட்டுள்ள கால அட்டவணைப்படி, அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் வழிகாட்டுதலின்படி நடைபெறும்.

| மாவட்டம் | | தேதி |
|---|---|---|
| கோவை | - | 10-10- 2023 |
| நீலகிரி | - | 11- 10- 2023 |
| திருப்பூர் | - | 12- 10- 2023 |
| ஈரோடு | - | 13- 10- 2023 |

இக்கூட்டங்கள் நடத்துவது தொடர்பாக மாநில தொழிலாளர் அணி துணைச் செயலாளர் நா.தமிழ்செல்வன் அவர்கள் தலைமையில் 2.10.2023 (திங்கட்கிழமை) காலை 10.00 மணியளவில், கோவை கிராஸ்கட் ரோட்டில் அமைந்துள்ள கோவை மாவட்டக் கழக அலுவலகத்தில், கோவை மண்டலத்திற்குட்பட்ட கோவை, நீலகிரி, திருப்பூர், ஈரோடு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட தொழிலாளர் அணி நிர்வாகிகள் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட மாவட்ட தொழிலாளர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணா அறிவாலயம்
சென்னை - 18
நாள் : 26 - 9 -2023

**பி.டி.சி. ஜி.செல்வராஜ்**
செயலாளர்
தி.மு.க. தொழிலாளர் அணி.



பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தாம்பரம் மாநகரம் பல்லாவரம் தெற்கு பகுதி திமுக சார்பாக பாகவாரியாக செயல்வீரர்கள் கூட்டம் நேற்று முதல் தொடர்ந்து நடைபெற உள்ளது. 20 வது வட்டக் கழகத்தில் நடைபெற்ற பாக செயல் வீரர்கள் கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி, மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்பட்ட பிரதிநிதி பம்மல் வடக்கு பகுதி துணைச் செயலாளர் மு.ஸ்ரீதர் ஆகியோர் கலந்து கொண்டு வர இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் பணியாற்றுவது குறித்து ஆலோசனைகள் வழங்கினார்கள். பகுதி கழகச் செயலாளர் இ.எஸ்.பெர்னார்ட், E.வெங்கடேசன், ஆர்.ராமகிருஷ்ணன், ஜே.சுரேஷ்குமார், வட்டக் கழகச் செயலாளர் எம்.முருகையன் ஆகியோர் உடன் இருந்தார்கள்.